**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.209 /2018**

PW1 – கார்த்திகேயன் த/பெ பரமசிவம்
நாள்–10.01.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

பட்டம்மாளுக்கு சண்முகம், கோபாலகிருஷ்ணன், ஜெயராமன், ராமசந்திரன், சீனிவாசன் , நடராஜன் ஆகிய 6 மகன்களும் பாலாம்பிகை, மலர்கொடி ஆகிய 2 மகள்களும் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி 8 வாரிசுகளில் 4 நபர்கள் மட்டும் தான் வா.சா.ஆ.1 ல் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். வழக்குரையில் பட்டம்மாளுக்கு 8 நபர்கள் வாரிசுதாரர்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். பட்டம்மாளின் இதர வாரிசு தாரர்களை மறைத்து தாவா தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

பட்டம்மாளின் மகன்கள் சண்முகம் 2016–ம், ஜெயராமன் 1996–ம் , ராமசந்திரன் 2009–ம் சீனிவாசன் 2014–ம் இறந்துவிட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பட்டம்மாளின் வாரிசுகளில் கோபாலகிருஷ்ணன், மலர்கொடி மற்றும் நடராஜன் ஆகியோர்கள் மட்டுமே உயிருடன் உள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பட்டம்மாளின் வாரிசுகளுக்கிடையே கருத்து வேருபாடு இருந்து வந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பட்டம்மாளின் வாரிசுகளுக்கிடையே கருத்து வேறுபாடு இருந்து வந்ததால் பட்டம்மாளின் நிலம் சாகுபடி செய்யாமல் தரிசாக இருந்து வருகிறது என்றால் சரியல்ல. அவ்வாறு தரிசாக இருந்த தாவா சொத்தை தான் தவறான ஆவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

எனது தகப்னார் சாராய வியாபாரி என்றால் சரியல்ல. அரசாங்கத்தால் ஏலம் எடுத்து கள்ளுக்கடை நடத்தி வந்தார். அதை பயன்படுத்தி பட்டம்மாளின் சொத்தை ஆக்கிரமித்துக் கொண்டோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ல் தாவா

சொத்திற்கான பட்டா எண்ணோ புல எண்ணோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எங்களுக்கு தாவா கிராமத்தில் தாவா சொத்தை தவிர வேறு நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆனது எங்களுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்து அல்லாத வேறு நிலங்களுக்கானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆனது வெவ்வேறு பேனாக்களில் எழுதப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் கொடுத்தார்கள். வா.சா.ஆ.2 இவ்வழக்கிற்கு தொடர்பில்லாதது என்றால் சரியல்ல.

பொதுவாக வட்டாட்சியர் வழங்கும் சான்றுகளில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளரின் கையொப்பம் இருக்கும் என்றும் வா.சா.ஆ. 5 ல் வட்டாட்சியரின் கையொப்பம் மட்டுமே உள்ளதால் அது வழக்கிற்காக மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றும், அதனால் தான் வா.சா.ஆ.5 ஆனது லேமினேட் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.5–ல் குறிப்பிட்டுள்ள ந.கா.எண் சம்மந்தமான வழக்கு கோப்பு வட்டாட்சியரின் அலுவலகத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.6–ல் விவசாயி விவரங்கள் என்னும் இடத்தில் தமிழ் என்றுதான் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

வா.சா.ஆ.7 ஆனது சுயமாக ஏற்படுத்திக் கொண்ட ஆவணங்கள் என்பதால் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு எங்களுக்கு எவ்வித உரிமை மூலமும், அனுபவமும் இல்லை என்பதால் நாங்கள் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து எங்களுக்கு உரிமையானாது என்று விளம்புகை கோரி வழக்குரை திருத்தப்பாடு செய்யாமல் நிரந்தர உறுத்துக்கட்டளை மட்டும் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பட்டம்மாளின் அனைத்து வாரிசுகளிடமிருந்தும் வா.சா.ஆ.1 ஏற்படுத்தாததால் அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா செலவுத்தொகையுடனும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.